# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 213 | 4 Pages | 6.3.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 213 | 4 பக்கங்கள் | 6.3.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# அறுபடை வீடு இலவச பயணம் தொடங்குகிறது அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிக்கை

சென்னை, மார்ச். 6

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் இரண்டாம் கட்டப் பயணம் நாளை பழனி, தண்டாயுதபாணிசுவாமிகோவிலில் இருந்து தொடங்குகிறது. பின்னர், திருச்செந்தூர், பழ முதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், சுவாமிமலை மற்றும் திருத்தணி ஆகிய கோவில்களில் தரிசனம் செய்த பின் பழனியில் நிறைவடைகிறது.

இந்த ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்கும் மூத்த குடிமக்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதிகளுடன் போர்வை, துண்டு, குளியல் சோப், டூத் பிரஷ், பேஸ்ட், முகம் பார்க்கும் கண்ணாடி, தேங்காய் எண்ணெய், சீப்பு போன்ற பொருட்கள் அடங்கிய பயணவழிப் பைகள் வழங்கப்படுகின்றன. மேலும், அவர்களுக்கு உதவியாக செயல் அலுவலர்கள், கோவில் பணியாளர்கள் மற்றும் மருத்துவ குழுவினரும் உடன் செல்கின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பாராளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும் அ.தி.மு.க., கூட்டணி வெற்றி பெறும் எஸ்.பி.வேலுமணி

பல்லடம், மார்ச். 6

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள கணபதி பாளையம் ஊராட்சி கள்ளிமேட்டில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 76 வது பிறந்தநாளை முன்னிட்டு அ.தி.மு.க. சார்பில் பொது க்கூட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும், அ.தி.மு.க. தலைமை நிலைய செயலாளருமான எஸ்.பி., வேலுமணி பேசியதாவது:

மக்களுக்கு நலத்திட்டங்களை செயல்படுத்துவதை விட்டு, விட்டு , அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப் பட்ட நலத்திட்டங்களை முடக்குவதில் தான் தி.மு.க.வினர் குறியாக உள்ளனர். நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி 40 தொகுதிகளிலும் வெற்றி பெறும். ஜெயலலிதா செய்த நல்ல பல திட்டங்களும், எடப்பாடி பழனிச் சாமி வழங்கிய சிறப்பான ஆட்சியின் பலன்களை மக்கள் உணர்ந்து அ.தி.மு.க.விற்கு வாக்களிப்பார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

நூலை எம்.ஏ.எம். பொறியியல் கல் லூரியின் விரிவுரையாளர் உ. லாவண்யா பெற்றுக் கொண்டார்.


நிகழ்ச்சியில் எழுத்தாளர்கள், பெண் கள் திரளாக கலந்து கொண்டனர்.

சிரா பதிப்பகம் மற்றும் சிரா இலக் கியக் கழகம் இணைந்து நடத்திய மக ளிர் தின விழா திருச்சி ப்ரீஸ் ரெசி டென்சியில் நடந்தது.

விழாவில் பெண்ணே பேசு என்ற புத்தகத்தை சிரா பதிப்பகத்தின் நிறுவ னர் தங்கபிரகாசி ராமச்சந்திரன், சிரா இலக்கியக் கழக தலைவர் கவிஞர் பா. ஸ்ரீராம், ரோட்டரி இன்டர்நேஷனல் மாவட்டம் 3000த்தின் 202425ம் ஆண்டுக்கான மீடியா பப்ளிசிட்டி ஆபீஸரும், சிரா இலக்கியக் கழக புர வலவருமான மேஜர் டோனர் டாக்டர் கே. ஸ்ரீனிவாசன், எஸ்.ஆர்.வி. பள்ளி யின் முதல்வர் பொற்செல்வி, சிரா இலக்கியக் கழக துணைத் தலைவர் எழுத்தாளர் கேத்ரின் ஆரோக்கிய சாமி, திருச்சிராப் பள்ளி மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் மூத்த எழுத்தாளர் மழபாடி ராஜாராம் , மருத்துவர் மணி மேகலை ஏகநாதன் ஆகியோர் வெளியிட்டு பேசினர்.

நூலை எம்.ஏ.எம். பொறியியல் கல் லூரியின் விரிவுரையாளர் உ. லாவண்யா பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் எழுத்தாளர்கள், பெண் கள் திரளாக கலந்து கொண்டனர். அனைவரையும் விழா குழுவினர் கவு ரவித்தனர்.

# அம்பானி வீட்டு திருமண விழா மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்த பிரபலங்கள்



டெல்லி, மார்ச். 6

முகேஷ் அம்பானியின் இளைய மகனான ஆனந்த் அம்பானிக்கு வரும் ஜூலை மாதம் திருமணம் நடைபெற உள்ளது. இவர் ராதிகா மொர்சண்ட் என்பவரை திருமணம் செய்யப்போகிறார். ராதிகா மொர்சண்ட் பிரபல நியூ யார்க் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். இவர் தொழில் சக்கரவர்த் தியான விரேனின் மகள். கடந்த சில நாட்களாக ஜாம் நகரில் *pre wedding Event* கோலாகலமாகவும். மிகவும் பிரமாண்டமாகவும் நடந்து வருகிறது. இதில் முக்கிய பிரபலங்களான மார்க் ஸூக்கர்பெர்க், நடிகர்கள் ரஜினி, சல்மான் கான், ஷாருக் கான், அமீர் கான் ஆகியோர் பங்கேற்றனர்.

நடிகர் ரஜினிகாந்த் மனைவி மற்றும் மகள் ஐஸ்வர்யா உடன் இந்நிகழ்ச் சியில் பங்கேற்றார். நடிகர் சித்தார்த் மல்ஹோத்ரா, அவரின் மனைவி கியாரா அத்வானி, பாலிவுட் நடிகர் கரீனா கபூர் அவரது கணவரான சயீப் அலிகான், பாலிவுட் நடிகர் விக்கி கவ்ஷல் மற்றும் அவரின் மனைவியான கத்ரீனா கைஃப் மற்றும் நடிகர் ரன்பீர் கபூரும் மற்றும் அவரின் மனைவி யான ஆலியா பட்டும் கலந்து கொண்டனர்.

பாலிவுட்டில் பச்சன் ஃபேமிலி என்றழைக்கப்படும் அமிதாப் பச்சன், அபிஷேக் பச்சன், ஐஷ்வர்யா ராய் மற்றும் இன்னும் பல பாலிவுட் நட்சத் திரங்களும் ஆனந்த் அம்பானி வீட்டு திருமண விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அதுமட்டுமில்லாமல் நேற்று நடந்த மஹா ஆர்த்தி விழா வில் விளையாட்டு வீரர் தோனி, சச்சின் டெண்டுல்கர் மற்றும் இயக்குநர் அட்லீ பங்கேற்றனர். தோனி குடும்பத்துடன் இயக்குநர் அட்லீ மற்றும் அவரின் மனைவி ப்ரியா எடுத்துக் கொண்ட புகைப்படம் இணையத்தில் வைரலானது.

# பெண்களுக்கு மாதம் ரூ.1500 வழங்கும் திட்டம்: தமிழ்நாட்டை பின்பற்றும் இமாச்சலப்பிரதேசம்



இமாச்சலப் பிரதேசம். மார்ச். 6

இமாச்சலப் பிரதேசத்தில் 18 முதல் 60 வயதுடைய மகளிருக்கு மாதம் ₹1,500 வழங்கப்படும் என அம்மாநில முதலமைச்சர் சுக்விந்தர் சுகு அறி வித்துள்ளார்.

கடந்த சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி 10 வாக்குறுதிகளில் இது வும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திரா காந்தி பியாரி பெஹ்னா சுக் சம்மன் நிதி யோஜனா என்ற இத் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ₹ 800 கோடி செலவிடப்படும் என்றும், 5 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் இதன் கீழ் பயனடைவார்கள் என்று அரசு தெரிவித்துள்ளது.

இன்றைய தினத்தில், டெல்லியில் 18 வயது நிரம்பிய பெண்கள் அனை வருக்கும் மாதம் ₹1,000 உதவித்தொகை வழங்கப்படும் என அம்மாநில அரசு அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டின் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து பிற மாநிலங்களும் இதனை செயல்படுத்தி வருகின்றன

# ஆபாச வீடியோ சர்ச்சை: மக்களவை தேர்தலில் இருந்து விலகிய பாஜக எம்.பி.

உத்தரபிரதேச, மார்ச்.6

உத்தரபிரதேச மாநிலம் பராபங்கி தொகுதி பாஜக எம்.பி., உபேந்திர சிங் ராவத், மீண்டும் அதே தொகுதிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நிலையில், தான் போட்டியிடப்போவதில்லை என தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வம்சாவளியைச் சேர்ந்த ஒரு பெண் உடன் உபேந்திர சிங் ராவத் இருக்கும் ஆபாச வீடியோ சமீபத்தில் வெளியாகி பரபரப்பை ஏற் படுத்திய நிலையில், கட்சித் தலைமை அறிவுறுத்தலால் அவர் போட்டி யில் இருந்து விலகியுள்ளார் எனக் கூறப்படுகிறது

ஆனாலும், பாஜக எம்.பி உபேந்திர சிங் ராவத், அந்த ஆபாச வீடியோ போலியானது என்று புகார் அளித்துள்ளார். எனது நற்பெயரை கெடுக்கும் எண்ணத்தில் *DeepFake AI* தொழில்நுட்பத்தால் இந்த வீடியோ உருவாக்கப் பட்டுள்ளதாக தனது புகார் மனுவில் அவர் தெரிவித்துள்ளார்.

அதே சமயம், நேற்று மேற்குவங்கம் மாநிலம் அசன்சோல் தொகுதிக்கு பாஜக வேட்பாளராக கட்சித் தலைமையால் அறிவிக்கப்பட்ட பவான் சிங், தான் போட்டியிடப்போவதில்லை என அறிவித்திருந்தார்.

பவான் சிங், பெங்காலி பெண்களை ஆபாசமாக சித்தரித்து பாடல்களில் நடித்துள்ளார் என்ற சர்ச்சை எழுந்த நிலையில், அவர் தேர்தலில் போட்டி யிடுவதில்லை என்ற முடிவை எடுத்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், பாஜக முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 195 இடங்களுக்கான வேட்பாளர் பட்டியலை பாஜக வெளி யிட்டுள்ளது. இதில், 28 பேர் பெண்கள், பட்டியலினத்தவர் 27, ஓபிசி 57 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அதன்படி, முதற்கட்ட பட்டியலில், பிரதமர் மோடி வாரணாசி தொகுதி யிலும், அமித்ஷா காந்தி நகர் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

# 350 பவுன் நகையுடன் மாயம் நூதன மோசடியில் ஈடுபட்ட சென்னை தம்பதி

நத்தம், மார்ச். 6

சென்னை பெரம்பூரில் நகைக்கடை நடத்தி வருபவர் தீபக்தேவ்கர் (வயது51). இவரது நண்பர் சஞ்சய் ஜெயின் (52). சென்னை வேப்பேரி யில் வசித்து வருகிறார். இவரிடம் தீபக்தேவ்கர் வட்டிக்கு 10 கோடி பணம் வாங்கி தருமாறு கேட்டுள்ளார்.

அதற்கு சஞ்சய் ஜெயினும், அவரது மனைவி ரக்சாவும் கமிஷனாக ரூ.1 கோடி கொடுத்தால் பணம் வாங்கி தரு கிறேன் என்று கூறியுள்ளனர். அதற்கு தீபக்தேவ்கர் தன்னிடம் பணம் இல்லை நகைகள் மட்டுமே உள்ளது என கூறியுள்ளார்.

அதற்கு அவர்கள் சம்மதித்தனர். இத னைத் தொடர்ந்து தீபக்தேவ்கர் சஞ்சய் ஜெயின் மற்றும் அவரது மனைவியை தொடர்பு கொண்டபோது நாங்கள் திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் உள்ளோம். எனவே அங்கு வந்து நகை களை தருமாறு கூறியுள்ளனர். அதன் பேரில் நத்தம் வந்த தீபக்தேவ்கர் பஸ் நிலையத்தில் வைத்து கடந்த மாதம் 21ம் தேதி கடையில் இருந்த 350 பவுன் நகைகளை கொடுத்துள்ளார். நகைகளை பெற்று கொண்ட தம்பதி 2 நாட்களில் கடன் பெற்று தருகிறோம் என கூறி சென்று விட்டனர். 2 நாட்கள் கழித்து தீபக்தேவ்கர் அவர்களை போன் மூலம் தொடர்பு கொண்டார். அதற்கு அவர்கள் சரியாக பதில் சொல் லாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளனர். கடைசிவரை கடன் வாங்கி தராததால் தான் ஏமாற்றப்பட்டதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இது குறித்து தீபக்தேவ்கர் நத்தம் போலீஸ் நிலை யத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கமுனிய சாமி வழக்கு பதிவு செய்து நகைகளு டன் மாயமான கணவன், மனைவியை தேடி வருகின்றனர். ஏமாற்றப்பட்ட நகைகளின் மதிப்பு ரூ.84 லட்சம் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. கடன் வாங்கி தருவதாக 350 பவுன் நகை மோசடி செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




# வரும் 9ஆம் தேதி மேல்மலையனூர் அங்காளம்மன் கோவில் மயான கொள்ளை திருவிழா





மேல்மலையனூர் மார்ச்6

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூரில் மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்ரீஅங்காளபரமேஸ்வரி அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஆண்டுதோறும் மகா சிவராத்திரியில் இருந்து 13 நாட்கள் மாசி பெருவிழாசிறப்பாக நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டுக்கான மாசி பெருவிழா வருகிற 8ம் தேதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இதில் இரண்டாம் நாள் நிகழ்ச்சியான மயான கொள்ளை விழா 9ஆம் தேதி நடைபெற உள்ளது. ஆணவம் கொண்டு இருந்த பிரம்மனை ஐந்து தலைகளில் ஒன்றை சிவபெருமான் எடுத்து விடுகிறார். இதனால் சிவபெருமானுக்கு பிரம்ம சக்தி தோஷம் ஏற்பட்டு பலஇடங்களில்அலைந்து திரிகிறார். கடைசியாக மகாவிஷ்ணு மேல்மலையனூருக்கு சென்றால்சாபம்விமர்சனம்கிடைக்கும் என ஆலோசனை கூறுகிறார். அதன்படி சிவபெருமான் மேல்மலையனூருக்கு வருகிறார். அவர் இங்கு வந்து தங்கிய இரவே மகா சிவராத்திரி என்று தாடபுராணம் கூறுகிறது. மறுநாள் சிவபெருமான் தங்கி இருந்த மயானத்துக்கு சென்று ஆதிபராசக்தி தான் ஏற்கனவே செய்து வைத்திருந்த நவ தானிய சுண்டல் மற்றும் கொழுக்கட்டை இரண்டையும் சேர்த்து மூன்று உண்டைகளாக வாரி இறைக்கிறார். தோஷம் நீங்கியது. அதை சிவபெருமான் கையில் இருந்து பிரம்மனின் தலை தன் நிறையை மறைத்து கீழே இறக்கி சாப்பிட்டு தொடங்கியது. அப்போது ஆதிபராசக்தி அலங்காரத்தில் உருவம் கொண்டு பிரம்மனின் தலையை மிதிக்கிறார்

இதனால் சிவபெருமானின் பிரம்ம சக்தி தோஷம் நீங்குகிறது. இந்த நிகழ்ச்சியை நினைவுபடுத்தும் வகையில் மயான கொள்ளை விழா நடைபெற்று வருகிறது வழக்கம். அதன்படி இந்தாண்டு விழாவுக்கான ஏற்பாடுகள் கோவில் நிர்வாகம் மற்றும் அறங்காவலர் குழுவினர் செய்து வருகின்றனர்.



கடலூர் மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மற்றும் மாடன் கல்வி சமுக சேவை மையம் இணைந்து திறன் பயிற்சி பெற்ற 100 நபர்களுக்கு சுயதொழில் தொடங்கிட ஊக்கப்படுத்திடும் வகையில் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அருண் தம்புராஜ் தையல் இயந்திரம் வழங்கினார்.

# கடலூர் கே.என்.சி கல்லூரியில் திட்ட சிறப்பு முகாம்




கடலூர் மார்ச் 6

கடலூரில் உள்ள கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் கடந்த 26 ஆம் தேதி தொடர் துவங்கி மார்ச் 5 வரை நடத்தப்பட்டு ஊராட்சியில் நடைபெற்றது. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டத்தின் மூன்று அலகுகள் இயங்கி வருகின்றன இதில் 300 மாணவியர்கள் தன்னார்வலர்களாக பணி செய்து வருகின்றனர் இவர்களுக்கான கிராமப்புற சிறப்பு நாட்டு நலப் பணித்திட்ட முகாம் கடலூர் வட்டம் நத்தப்பட்டு ஊராட்சியில் கடந்த 28ஆம் தேதி துவங்கியது. கல்லூரி முதல்வர் முனைவர்சபீனாபானு தலைமையில் நடைபெற்ற விழாவில் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் கதிர்வேல் கடலூர் குழந்தை நலக் குழு உறுப்பினர் இளங்கோவன்காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் எஸ் பிரபாகரன் காவல் ஆய்வாளர் பி கவிதா ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். மேலும் யோகா மனவலிமை மற்றும் மன நலம் குறித்த மருத்துவர் பிரபாகரன் அவர்கள் பயிற்சி வழங்கினார் மருத்துவர் பிரதீப் ரவிச்சந்திரன் பேசும்போது உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் மற்றும் உறுப்புகள் தானம் குறித்து உரையாற்றினர் மீண்டும் மஞ்சப்பை திட்டம் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து மிதிவண்டி பேரணி நடத்தப்பட்டது கிராம மக்கள் வாழ்வு நிலை குறித்து கணக்கெடுப்பும் நடத்தப்பட்டது வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் வாக்களிப்பு குறித்து கடலூர் வட்டாட்சியர் பலராமன் அவர்களும் கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரியின் பொருளாதார உதவி பேராசிரியர் முனைவர் கவிதா அவர்களும் உரையாற்றினர். கடந்த ஏழு நாட்களாக நடைபெற்ற இச்சிறப்பு முகாமில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் விஜயலட்சுமி முனைவர் கதம்பரி ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர்.

முகாமில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவியர் 150 பேர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். முகாமில் நத்தப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் விஜயா ராஜேந்திரன் மற்றும் ஊர் பொதுமக்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# நெய்வேலி அருகே ரூ.5 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்டங்கள்: அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார்



நெய்வேலி மார்ச் 6

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி வட்டம் மற்றும் பண்ருட்டி வட்டம் சேர்ந்த 456 பயனாளிகளுக்கு வடக்குத்து தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் அரசின் வேளாண்துறை, வருவாய் துறை, தோட்டக்கலைத் துறை மருத்துவ துறை, ஊரக வளர்ச்சி துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, மற்றும் பல்வேறு துறைகள் மூலம் 456 பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 15 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாநில தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சசி.வி.கணேசன் நேற்று வழங்கினார்.

அப்போது அவர், " அரசு பெண்கள் நலனில் அக்கறை கொண்ட அரசு என்றும்பொதுமக்களின்மேல் அக்கறை கொண்ட அரசு என்றும் பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திக் வருவதாகவும் மேலும் மகளிர்க்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் கடலூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் அருண் தம்ராஜ், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.ராஜேந்திரன், பண்ருட்டி ஒன்றிய குழு தலைவர் சபா.பாலமுருகன் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# முசிறி அருகே சாலை விபத்தில் விவசாயி பலி அதிர்ச்சியில் மனைவி தற்கொலை





முசிறி, மார்ச். 6

திருச்சி மாவட்டம் முசிறி அருகே உள்ள வடக்கு அயித்தாம்பட்டியை சேர்ந்தவர் சிலம்பரசன் (வயது 34). விவசாயி. இவர் அதே பகுதியை சேர்ந்த தனது நண்பர் குபேந்திரன்(21) என்பவருடன் மோட்டார் சைக்கிளில் வடக்கு அயித்தாம் பட்டியில் இருந்து நான்காவது மைலுக்கு சென்றார்.

முசிறி, துறையூர் சாலையில் நான்காவது மைல் அருகே சீனிவாசன் என்பவரது வீடு அருகே வந்த போதுதுறையூரில் இருந்து குளித்தலை ரெயில்வே ஸ்டேஷன் பகுதியைச் சேர்ந்த சக்தி முருகன் (56) என்பவர் ஓட்டி வந்த ஆம்னி கார் மோட்டார் சைக்கிள் மீது மோதியது. இதில் சிலம்பரசன் படுகாயம் அடைந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்த போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் திருப்பதி விரைந்து சென்று சிலம்பரசன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு முசிறி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். விபத்தில் கணவர் இறந்த தகவல் அறிந்து சிலம்பரசனின் மனைவி கலா (27) கணவரின் உடலை பார்த்து கதறி அழுதார். அவருக்கு உறவினர்கள் ஆறுதல் கூறி வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

வீட்டுக்கு சென்ற பின்னர் துக்கம் தாளாமல் கதறி அழுதுகொண்டே இருந்தார். திடீரென்று அவர் ஓடி சென்று வீட்டின் அருகில் இருந்த கிணற்றில் குதித்து விட்டார்.

அக்கம்பக்கத்தினர் திரண்டு அவரை மீட்க முயன்றனர். பின்னர் இது குறித்து முசிறி தீயணைப்புத் துறையினருக்கு தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு தீ தடுப்பு நிலைய அதிகாரி கர்ணன் தலைமையில் சென்ற குழுவினர் கிணற்றில் இறங்கி கலாவை பிணமாக மீட்டனர். பின்பு கலாவின் உடலும் பிரேத பரிசோதனைக்காக முசிறி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சாலை விபத்தில் கணவன் இழந்த துக்கம் தாளாமல் மனைவியும் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இதனால் வடக்கு அயித்தாம்பட்டி கிராமமே சோகத்தில் மூழ்கியது. இருவரும் காதல் திருமணம் செய்து கொண்ட இளம் தம்பதியினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களின் விளையாட்டு திறன் ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட அளவில் விளையாட்டு போட்டிகள்



திருவாரூர் மார்ச், 6

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஸ்போர்ட்ஸ் அகாடமியின் நான்காம் ஆண்டு தொடக்கவிழாவும், மாணவர்களின் திறன் ஊக்குவிக்கும் வகையில் பல மாவட்ட மாணவர்கள் கலந்துக் கொண்ட விளையாட்டு போட்டிகளும், குழந்தைகளுக்கான தடகளப் போட்டிகளும் பி. எஸ். ஏ காம்ப்ளக்ஸில் நடைபெற்றது. துவக்க விழாவில் மன்னார்குடி கால்பந்தாட்ட அகடமி நிறுவனர் மார்க்ஸ் , திருத்துறைப்பூண்டி பழைய பேருந்து நிலையத்திலிருந்து ஒலிம்பிக் ஜோதியை ஏற்றி வைத்து பேரணியை தொடங்கி வைத்தார். எலும்பு முறிவு மருத்துவர் சுரேஷ் கொடியேற்றி வைத்தும், தலைமை தாங்கியும் விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார். இவ்விழாவிற்கு அகாடமியின் செயலாளர் ராஜநாராயணன் அனைவரையும் வரவேற்றார். டிடிபி ஸ்போர்ட்ஸ் அகடமியின் நிறுவனர் விஜயகுமார், அகடமியின் கௌரவ செயலாளர் டாக்டர். ரொட்டரியன் துரை ராயப்பன், ரோட்டரி சங்க தலைவர் கணேசன், டெல்டா ரோட்டரி சங்க தலைவர் மாணிக்கவாசகம், ரோட்டரி சங்க செயலாளர் அகிலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்.எஸ்.ஆர் நிறுவன மேலாண் இயக்குனர் அரிமா. ஆர்.எஸ் .ஆர் . செல்வகணபதி , பார்ம் மெட்ரிக் பள்ளியின் தாளாளர் திருமதி பர்வீன் ஆரிஃப் ஆகியோர்வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ் பால் சிவக்குமார், மாடர்ன் நர்சரி & பிரைமரி பள்ளி முதல்வர் திருமதி. தீபா ராணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கும்பகோணம், திருவாரூர், கொரடாச்சேரி, திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி , முத்துப்பேட்டை, நீடாமங்கலம், வேதாரண்யம் போன்ற பல மாவட்ட பகுதிகளிலிருந்து மாணவர்கள் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டனர் .அனைத்து பள்ளிகளின் உடற்கல்வி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், குடும்பத்தினர் என இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் அம்மையப்பன்அரசினர்மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியர் இளையராஜா பார்த்திபன் அனைவருக்கும் நன்றி கூறினார். விழா விழா இனிதே நிறைவு பெற்றது விழா இனிதே நிறைவு பெற்றது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை டிடிபி ஸ்போர்ட்ஸ் அகடமி மிக சிறப்பாக செய்திருந்ததால், அனைவரின் பாராட்டை பெற்றனர்.

# கலைஞர் அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வையிட அனுமதி




சென்னை, மார்ச். 6

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

முன்னாள்முதலமைச்சர் கருணாநிதியின் நினைவிடம் மெரினா கடற்கரை, காமராஜர்சாலையில் மிகச் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டு, 26.3.2024 அன்று முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் நாள்தோறும் வந்து கருணாநிதி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அதனுடன், கருணாநிதியின் இலக்கிய, அரசியல் வாழ்க்கை வரலாற்றினைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் அந்நினைவிட வளாகத்தில் நிலவறையில் நவீன தொழில்நுட்பங்களுடன் பல்வேறு அரங்கங்களுடன் "கலைஞர் உலகம்" என்னும் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தில், கருணாநிதியின் நிழலோவியங்கள், உரிமை வீரர் கலைஞர், கலைஞருடன் ஒரு புகைப்படம், புதிரை வெல் கலைஞர் வழிசெல், அரசியல் கலை அறிஞர் கலைஞர், கலைஞருடன் ஒரு நேர்காணல், நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி, பண்பாட்டுப் பேழை, கலைஞரின் வரலாற்றுச் சுவடுகள், கலைஞரின் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள், சரித்திர நாயகனின் சாதனைப் பயணம் போன்ற அரங்கங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கலைஞர் உலக அருங்காட்சியகத்தினைப் பொதுமக்கள் பார்வையிடுவதற்கு 632024 புதன்கிழமை முதல் அனுமதிக்கப்படும். இதனை பார்வையிடுவதற்குத் தமிழ்நாடு அரசின் *https://www.kalaignarulagam.org/* என்ற இணைய முகவரி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணைய முகவரியில் பொதுமக்கள் பதிவு செய்து அனுமதிச் சீட்டினைப் பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

கலைஞர் உலகத்திற்கான அனுமதிச் சீட்டு பெறுவதற்குக் கட்டணம் ஏதுமில்லை. முற்றிலும் இலவசமாக கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை பொதுமக்கள் கண்டு களிக்கலாம்.

ஒருவர் ஒரு அலைபேசி எண்ணின் மூலம் அதிகபட்சமாக 5 அனுமதிச் சீட்டுகள் வரை பெற்றுக் கொள்ள இயலும். இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட அனுமதிச்சீட்டுடன் வருபவர்களுக்கு நிலவறையிலுள்ள உலகத்திற்கு அனுமதி வழங்கப்படும்.

மேலும், ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை 6 காட்சிகளாக நடைபெறும். பொதுமக்கள் தங்களுக்கு வசதியான காட்சி நேரத்தை தேர்வுசெய்து முன்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளலாம். அக்காட்சியினைக் காண வரும் பொதுமக்கள், காட்சி நேரத்திற்கு 30 நிமிடத்திற்குமுன்பாகவே வருகைபுரிய வேண்டும். கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை பார்வையிட ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் ஆகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்திற்கு அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதிச் சீட்டு ஏதும் தேவையில்லை.

இவ்வாறு அந்த அறிக்கையில்கூறப்பட்டுள்ளது.

# விழுப்புரத்தில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி



விழுப்புரம் மார்ச் 6

விழுப்புரம் பெருந்திட்ட வாலகத்தில் பெண் குழந்தை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இதில் பெண் குழந்தை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த பதாகைகள் மாணவர்கள் ஏந்தி சென்றனர்.

இதற்கு காவல்துறை கண்காணிப்பாளர் ராமச்சந்திரன்சுரேஷ் மற்றும் பெண் காவல் அலுவலர்கள் முன்னிலை வகித்தனர்.

இதில் காவல் உதவி ஆய்வாளர் எம் கலைச்செல்வி ஏ ஆர் சி மாவட்ட கல்வி அலுவலர் முனைவர் மா பாபு செல்வதுரை காவலர் சிறுவர் மன்ற மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செல்வராஜ், நேரு யுவகேந்திரா சக்திவேல், அன்னை தெரசா சேவை கரங்கள் நிர்வாகிகள் திருமால் சரண்யா ஆகியோர் பங்கேற்றனர் சுமார் 500 மாணவிகள் பேரணியில் பங்கேற்றனர்.

# ராமேசுவரம், மண்டபம் மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்க செல்ல வேண்டாம் மீனவர் நலத்துறை மீண்டும் எச்சரிக்கை



ராமேசுவரம், மார்ச். 6

ராமநாதபுரம் மாவட்டம், பாக்ஜலசந்தி கடல் பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் ராமேசுவரம், மண்டபம் பகுதி மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதாக கூறி இலங்கை கடற்படையினர்அடிக்கடிசிறைபிடித்து வருகின்றனர். மேலும் படகுகளை பறிமுதல் செய்வதுடன் மீனவர்களுக்கும் தண்டனை விதித்து வருகின்றனர்.

இதனால் வாழ்வாதாரம் இழந்த ஏராளமான மீனவர்கள் மாற்று தொழிலை நாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மீன்பிடி தொழிலை சார்ந்துள்ள லட்சக்கணக்கானோரும் வேலையிழந்து தவித்து வருகிறார்கள். ஒவ்வொரு நாளும் துயரத்துடன் கடலுக்கு சென்றுவரும் மீனவர்கள் மீது அக்கறை கொண்டு அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வலுத்து வருகிறது.

மீனவர்கள் சிறை பிடிப்பதை கண்டித்தும், மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் ராமேசுவரம், மண்டபம் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதே போன்று இலங்கையில் மன்னார், பேசாளை, நெடுந்தீவு உள்ளிட்ட பகுதி மீனவர்களும் தற்போது இலங்கையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் ராமேசுவரம், மண்டபம் மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடிக்கும் போது தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அதிகாரிகள் ராமேசுவரம், மண்டபம் மீனவர்கள் எல்லை தாண்டிமீன்பிடிக்கசெல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் காரணமாக ராமேசுவரத்தில் சிறிய படகுகள் மட்டுமே மீன்பிடிக்க சென்றுள்ளது. பெரிய படகுகள் மீன்பிடிக்க செல்லவில்லை என்பது குறிப்பிடதக்கது. இலங்கை கடற்படையை கண்டித்து தமிழக மீனவர்கள் போராட்டம் நடத்தி வந்த நிலையில், தற்போது தமிழக மீனவர்களை கண்டித்து இலங்கை மீனவர்கள் போராட்டத்தில் குதித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஒரே மாதத்தில் ரூ.3 ஆயிரம் உயர்ந்தது: மஞ்சள் விலை குவிண்டால் ரூ.16 ஆயிரத்துக்கு விற்பனை



ராமேசுவரம், மார்ச். 6

ராமநாதபுரம் மாவட்டம், பாக்ஜலசந்தி கடல் பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் ராமேசுவரம், மண்டபம் பகுதி மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதாக கூறி இலங்கை கடற்படையினர்அடிக்கடிசிறைபிடித்து வருகின்றனர். மேலும் படகுகளை பறிமுதல் செய்வதுடன் மீனவர்களுக்கும் தண்டனை விதித்து வருகின்றனர்.

இதனால் வாழ்வாதாரம் இழந்த ஏராளமான மீனவர்கள் மாற்று தொழிலை நாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மீன்பிடி தொழிலை சார்ந்துள்ள லட்சக்கணக்கானோரும் வேலையிழந்து தவித்து வருகிறார்கள். ஒவ்வொரு நாளும் துயரத்துடன் கடலுக்கு சென்றுவரும் மீனவர்கள் மீது அக்கறை கொண்டு அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வலுத்து வருகிறது.

மீனவர்கள் சிறை பிடிப்பதை கண்டித்தும், மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் ராமேசுவரம், மண்டபம் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதே போன்று இலங்கையில் மன்னார், பேசாளை, நெடுந்தீவு உள்ளிட்ட பகுதி மீனவர்களும் தற்போது இலங்கையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் ராமேசுவரம், மண்டபம் மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடிக்கும் போது தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அதிகாரிகள் ராமேசுவரம், மண்டபம் மீனவர்கள் எல்லை தாண்டிமீன்பிடிக்கசெல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் காரணமாக ராமேசுவரத்தில் சிறிய படகுகள் மட்டுமே மீன்பிடிக்க சென்றுள்ளது. பெரிய படகுகள் மீன்பிடிக்க செல்லவில்லை என்பது குறிப்பிடதக்கது. இலங்கை கடற்படையை கண்டித்து தமிழக மீனவர்கள் போராட்டம் நடத்தி வந்த நிலையில், தற்போது தமிழக மீனவர்களை கண்டித்து இலங்கை மீனவர்கள் போராட்டத்தில் குதித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தோட்டத்தில் புகுந்து வாழைபாக்கு மரங்களை சேதப்படுத்திய காட்டு யானைகள்



தாளவாடி, மார்ச். 6

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன. இந்த வனச்சரகத்தில் ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகின்றன. தற்போது வனப்பகுதியில் கடும் வரட்சி நிலவுவதால் வனவிலங்குகள் உணவு, தண்ணீர் தேடி கிராமத்துக்குள் புகுவது தொடர் கதையாகி வருகிறது.


அதிலும் சமீப காலமாக யானைக் கூட்டங்கள் அடிக்கடி வனப்பகுதியை விட்டு வெளியேறி கிராமத்துக்குள் புகுந்து பயிர்களை சேதம் செய்வது தொடர்கதையாகி வருகிறது.

இந்நிலையில் ஜீரகள்ளி வனச்சரகத்திற்கு உட்பட்ட கிருஷ்ணாபுரம் கிராமத்தில் சோமசுந்தரம் (வயது 40) என்பவருக்கு சொந்தமான விவசாய தோட்டத்துக்குள் நேற்று இரவில் புகுந்த 3 காட்டு யானைகள் சுமார் 300 க்கும் மேற்பட்ட வாழை மரங்கள், 50க்கும் மேற்பட்ட பாக்கு மரங்களை முறித்து சேதம் விளைவித்துள்ளது.

இதனால் விவசாயிக்கு லட்சக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து யானை கூட்டம் விளைநிலங்களை சேதப்படுத்தி வருவதால் அப்பகுதி விவசாயிகள் கடும் அதிர்ச்சியிலும், அச்சத்திலும் உள்ளனர்.

சேதமடைந்த வாழை மரங்களுக்கும், பாக்கு மரங்களுக்கும் வனத்துறையினர் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனவும், யானைகள் விவசாய நிலங்களில் நுழைவதை தடுக்க வனத்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# உயிருக்கு போராடும் பெண் யானை தாயை சுற்றி வரும் குட்டி யானையின் பாச போராட்டம்



சத்தியமங்கலம், மார்ச். 6

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் 10 வனச்சரகங்கள் உள்ளன. இதில் ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகின்றன.

இதில்யானைகூட்டங்கள் வனப்பகுதியை விட்டு வெளியேறி வனப்பகுதியில் உள்ள சாலையில் சர்வ சாதரணமாக நடமாடி வருகிறது.

இந்நிலையில் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட சத்தியமங்கலம் வனச்சரகம், பண்ணாரி கோவில் அருகே நேற்று இரவு குட்டியுடன் தாய் யானை ஒன்று வந்துள்ளது. அப்போது அந்த தாய் யானை திடீரென உடல் நிலை சரியில்லாமல் மயங்கி விழுந்தது. இதைப் பார்த்த குட்டி யானை தாய் யானையை சுற்றி சுற்றி வந்து சத்தமாக பிளறியது. யானை சத்தம் கேட்டு அருகில் உள்ள மக்கள் ஓடி வந்து பார்த்தனர். பின்னர் இதுகுறித்து வனத்துறையினருக்கு பொதுமக்கள் தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த சத்தியமங்கலம் வனத்துறையினர்மற்றும்கால்நடை மருத்துவர் சதாசிவம் தலைமையிலான குழுவினர்தாய் யானைக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

40 வயது மதிக்கத்தக்க தாய் யானைக்கு குளுக்கோஸ் மற்றும் குடிப்பதற்கு தண்ணீர், உண்பதற்கு இலைகள் போன்றவற்றை வனத்து றையினர் அளித்து வருகின்றனர். இருந்தாலும் தாய் யானையால் எழுந்து நிற்க முடியவில்லை.

சம்பவ இடத்திலேயே உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறது. 2 மாதமே ஆன குட்டி யானை தாய் யானையை சுற்றி சுற்றி வந்து சத்தமிட்டு வருகிறது. பண்ணாரி பவானிசாகர் சாலையின் அருகிலேயே யானை படுத்திருப்பதால், குட்டி யானை சாலைக்கு சென்று வாகனங்களில் அடிப்பட்டு விடக்கூடாது என்பதற்காக வனத்துறையினர் 5 அடி ஆழத்தில் ஒரு குழியை தோண்டி அந்தக் குழிக்குள்குட்டியானையை வைத்து பராமரித்து வருகின்றனர்.

குட்டி யானைக்கு பால் மற்றும் தண்ணீர் வழங்கி வருகின்றனர். தாயை விட்டு பிரிய முடியாமல் இருக்கும் 2 மாத குட்டி யானையின் பாச போராட்டம் தொடர்ந்து நீடித்து வருகிறது. தொடர்ந்து வனத்துறையினர் தாய் யானைக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்நிலையில் வனப்பகுதியில் இருந்து 2 காட்டு யானைகள் திடீரென வெளியேறி உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் பெண் யானை அருகே சத்தமிட்டவாறு வந்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த வனத்துறையினர் உடனடியாக பட்டாசுகளை வெடித்து அந்த காட்டு யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டினர்.

# பாலாற்றில் தடுப்பணை ஆந்திர அரசுக்கு துரைமுருகன் கடிதம்



வேலூர், மார்ச். 6

வேலூர் மாவட்டம், காட்பாடியில் தி.மு.க. வாக்குசாவடி முகவர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதில் தமிழக நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேசியதாவது:

பிரதமர்மோடி தமிழகம் அடிக்கடி வந்து ஏதாவது மீன்சிக்காதா? எனமுயற்சி செய்கிறார். வட மாநிலம் முழுவதும் பா.ஜ.க.வுக்கு தோல்வி தான் மிஞ்சும். எனவே அடிக்கடி தமிழகம் வருகிறார்.

இங்கு வந்து அவர் பேசுவது ஒரு பிரதமருக்கு அழகல்ல. மத்திய அரசு செயல்பாடுகள் எதையும் செய்யவில்லை. மதுரையில் 10 ஆண்டுகளுக்கு முன்பாக எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கபடும் என்றார்கள். தற்போது தேர்தல் வருகிறது என்பதற்காக டெண்டர் வைத்துள்ளோம் என்கிறார்கள்.

மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. இதுதான் அவர்களின் செயல்பாடு. மாநில உரிமையை பறிக்கிறார்கள். பா.ஜ.க.வினர், தி.மு.க. வாரிசு அரசியல் என்று சொல்கிறார்கள்.

உங்கள் குடும்பம் போல் தரித்திர நாராயணனாக இருந்து ஆட்சிக்கு வந்தவர்களா நாங்கள். இந்த முறை பா.ஜ.க. ஆட்சிக்கு வராது.

இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் அமைச்சர் துரைமுருகன் கூறுகையில்:

பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு கோர்ட்டில் வழக்குகள் எல்லாம் நிலுவையில் உள்ள போது சட்டத்திற்கு புறம்பாக நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் அணையை கட்ட உள்ளனர்.

இவ்வாறு அணைக் கட்ட கூடாது என ஆந்திர மாநில நீர்வளத்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளேன். கடிதத்தில் 3 வழக்குகள் நிலுவையில் உள்ளது. உச்ச கோர்ட்டை அவமதிக்கும் செயல் என்று சுட்டிக்காட்டி உள்ளேன்.

அண்டை மாநிலமான எங்களோடு பேசியிருக்கலாம். பேசாமல் செய்வது தவறு என எழுதி உள்ளேன் என்றார்.

# மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக சென்ற பைக் ரைடர் பலி



நாகப்பட்டினம், மார்ச். 6

நாகப்பட்டினம் நகராட்சிக்கு உட்பட்ட திருமேனி செட்டி தெருவை சேர்ந்தவர் மணி. இவரது மகன் கோகுலகிருஷ்ணன் (வயது 20). தனியார் கல்லூரியில் படித்து வந்தார்.

இவர் இன்ஸ்டாகிராமில் பிரபலமாக வேண்டும் என்பதற்காக விலை உயர்ந்த மோட்டார் சைக்கிளில் வீலிங் செய்து அதனை வீடியோவாக எடுத்து இன்ஸ்டாகிராமில் பதிவிட்டு வந்துள்ளார். இந்நிலையில், நேற்று இரவு இவர் தனது நண்பருடன் புத்தூரில் உள்ள கடையில் டீ குடித்து விட்டு மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக வந்துள்ளார். அப்போது பைகரா வளைவில் வந்த போது திடீரென மோட்டார்சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து நிலை தடுமாறி அருகில் உள்ள ஒரு வீட்டின் சுவற்றின் மீது மோதியது.

இதில் கோகுலகிருஷ்ணனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். பின்னால் அமர்ந்திருந்த அவரது நண்பருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. அவ்வழியாக வந்தவர்கள் அவர்களை நாகை அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். இந்த விபத்தில் இளைஞர் ஓட்டி வந்த மோட்டார் சைக்கிளின் முன்பகுதி முற்றிலும் சேதமானது. இதுகுறித்து நாகை நகர போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மோட்டார்சைக்கிளில் அதிவேகமாக சென்ற வாலிபர் பலியான சம்பவம் அப்பகுதியல்பெரும்சோகத்தை ஏற்படுத்தியது.

# பிரதமர் மோடி தமிழகத்தில் குடியேறினாலும் பாரதிய ஜனதாவிற்கு வாக்கு விழாது கனிமொழி பேச்சு




விளாத்திகுளம், மார்ச். 6

பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு தி.மு.க. சார்பில் தமிழகம் முழுவதும் தெருமுனை பிரசாரம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில்விளாத்திகுளத்தில் நேற்று மாலை விளாத்திகுளம் மதுரை சாலையில் உள்ள கலைஞர் திடலில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. தலைமையில் எல்லோருக்கும் எல்லாம் எனும் தலைப்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா, நிதி நிலை அறிக்கை பொதுக்கூட்டம் மற்றும் பாராளுமன்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் கீதா ஜீவன், நாஞ்சில் சம்பத் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

ஒன்றிய அரசு தமிழகத்தின் மக்கள் பணத்தை ஜி.எஸ்.டி. என்ற பெயரில் வசூலித்து கொண்டு சென்று வடமாநிலங்களின் வளர்ச்சிக்காக பயன்படுத்துகிறது.

மாறாக மாநிலத்திற்கு வழங்கவேண்டியநிதியை தமிழகத்திற்கு ஒருதலைப் பட்சமாக வழங்காமல் நிதி நெருக்கடியை உருவாக்க முயற்சி செய்கிறது.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரையில் ஒரு பைசா கூட ஒன்றிய அரசு வழங்காமல் தமிழகத்தை வஞ்சித்து வருகிறது.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் கொள்ளை அடித்து இங்கிலாந்தின் வளர்ச்சிக்கு நிதியை பயன்படுத்தியது போன்று பிரதமர் மோடியின் தலைமையிலான ஒன்றிய அரசு பல்வேறு மாநிலங்களில் ஜி.எஸ்.டி. வரி வசூல் செய்து பா.ஜ.க. ஆளும் கட்சியாக உள்ள மாநிலங்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தி வருகிறது.

பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மனை போன்று பிரதமர் மோடியின் தலைமையிலான மக்கள் விரோத ஒன்றிய அரசை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு எதிர்த்து வருகிறது.

ஒன்றிய அரசின் தூண்டுதலின் பேரில் தமிழகத்தின் அமைச்சர்கள் வீடுகளில் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் இத்தகைய மிரட்டலுக்கு ஒரு போதும் தி.மு.க. அரசு அஞ்சுவதில்லை.

டெல்லியில் விவசாயிகளின் வேண்டுகோளை காது கொடுத்து கேட்காத ஒன்றிய அரசு தமிழகத்திலும் சென்னை, தூத்துக்குடி, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போதும் மக்களின் வேண்டுகோளை காது கொடுத்து கேட்கவில்லை. வெள்ள நிவாரண நிதியையும் வழங்கவில்லை.

பாராளுமன்ற தேர்தல் வர இருப்பதால் தேர்தல் பயத்தில் பிரதமர் மோடி அடிக்கடி தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கிறார். அவர் தமிழகத்திலேயே குடியேறினாலும் தமிழக மக்கள் பா.ஜ.க. அரசை ஏற்க மாட்டார்கள். பாரதிய ஜனதாவுக்கு ஓட்டுகள் விழாது. நாடும் நமதே நாற்பதும் நமதே.

இவ்வாறு அவர் பேசினார்.

# பிரதமர் யார் என்பதை நிர்ணயிக்கும் சக்தியாக எடப்பாடி பழனிசாமி உருவெடுத்து வருகிறார் ஜெயராமன்




திருப்பூர், மார்ச். 6

போதை பொருட்கள் கடத்தலை தடுக்க தவறிய தி.மு.க. அரசை கண்டித்து திருப்பூரில் இன்று அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பொள்ளாச்சி ஜெயராமன் எம்.எல்.ஏ., பேசியதாவது:

தமிழகத்தில் போதை பொருட்கள் விற்பனையை தடுக்க தி.மு.க. அரசு தவறிவிட்டது. ஏற்கனவே 2 ஜி ஊழல் வழக்கில் தமிழகத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்தினர். இப்போது போதை பொருள் விற்பனையால் மிகப்பெரிய தலைகுனிவை ஏற்படுத்தி உள்ளனர். வெளிநாடுகளில் இருந்து தி.மு.க.வின் அயலக அணி இணைச்செயலாளர் ஒருவர் பல கோடி மதிப்பிலான போதைப் பொருட்களை தமிழகத்திற்கு கடத்தி வந்து தமிழக இளைஞர்களுக்கு சப்ளை செய்துள்ளார். 3 ஆண்டு காலத்தில் பல ஆயிரம் கோடி போதை பொருட்களை வெளிநாடுகளில் இருந்து கடத்தி வந்துள்ளார்கள். இதேபோல் தமிழகம் முழுவதும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு அடைந்துள்ளது. இதனை தடுக்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தவறிவிட்டார்.

இன்று திருப்பூர் மாநகராட்சியில் ஊழல் மலிந்து கிடக்கிறது. 50 சதவீத கமிஷன் கேட்பதால் எந்த ஒரு பணி செய்வதற்கும் ஒப்பந்ததாரர்கள் முன் வரவில்லை.

தமிழகத்தின் எதிர்க்கட்சி தலைவராக எடப்பாடி பழனிச்சாமி சிறப்பாக செயல்பட்டு வருவதோடு மக்களின் பிரச்சினைகளை சட்டசபையில் எடுத்து பேசி வருகிறார். ஆனால் அதற்கு தி.மு.க. உரிய பதில் அளிக்கமுடியாமல்திணறி வருகிறது. வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் இந்தியாவின் பிரதமர் யார் என்பதை நிர்ணயிக்கும் சக்தியாக எடப்பாடி பழனிச்சாமி உருவெடுத்து வருகிறார். பாராளுமன்றத் தேர்தல் வெகு விரைவில் வரப்போகிறது. இதில் அ.தி.மு.க. சார்பில் திருப்பூர், கோவை, ஈரோடு, நீலகிரி உள்ளிட்ட மேற்கு மண்டலம் முழுவதும் போட்டியிடும் வேட்பாளர்களை எம்ஜிஆர் ஜெயலலிதா ஆகியோர் போட்டியிடுகிறார்கள் என நினைத்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும். இவர் அவர் பேசினார்.



## தென் மாவட்டம்' படம் யுவன் Vs ஆர்.கே.சுரேஷ்

பிரபல தயாரிப்பாளரும் நடிகருமான ஆர்.கே.சுரேஷ் தர்மதுரை, சலீம் உள்ளிட்ட பல படங்களை தயாரித்துள்ளார். மேலும் விநியோகஸ்தராக நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம், பரதேசி, தங்கமீன்கள் உள்ளிட்ட படங்களிலும், பாலாவின் தாரைதப்பட்டை, மருது, ஹர ஹர மஹாதேவகி, இப்படை வெல்லும், காளி, நம்ம வீட்டு பிள்ளை, விருமன், பட்டத்து அரசன் ஆகிய படங்களிலும் நடித்துள்ளார்.

இந்நிலையில் 'தென்மாவட்டம்' என்ற புதிய படத்தை இயக்கி அதில் நடிக்க உள்ளார். இந்த படத்தின் முதல் 'லுக் போஸ்டர்' வெளியாகி உள்ளது. இப்படத்தில் யுவன்சங்கர் ராஜா இசையமைக்கிறார் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்த 'போஸ்டர்' சமூக வலைதளங்களில் பரவியது. இந்நிலையில் இப்படத்திற்கு தான் இசையமைக்கவில்லை என்று யுவன் சங்கர் ராஜா மறுப்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து யுவன்சங்கர் ராஜா கூறியதாவது:

ஆர்.கே.சுரேஷ்இயக்கிநடிக்கஉள்ள'தென்மாவட்டம்' என்ற புதிய படத்திற்கு நான் இசை அமைக்கவில்லை. இப்படத்திற்காக யாரும் என்னை அணுகவில்லை. இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

இந்நிலையில் 'எக்ஸ்' தளத்தில் ஆர்.கே. சுரேஷ் பதிலளித்துள்ளார்.அதில்"யுவன்சார்நீங்கள்படத்திற்கும், லைவ் கான்சர்ட்டிற்கும் ஒப்பந்தமாகி இருக்கிங்க. ஒப்பந்தத்தை தெளிவாக சரிபார்க்கவும்"என்று குறிப்பிட்டுள்ளார். யுவன் சங்கர் ராஜா பதிவை பார்த்து ஆர்.கே.சுரேஷை ரசிகர்கள் விமர்சித்தனர். தற்போது ஆர்.கே.சுரேஷ்வெளியிட்டபதிவால்மீண்டும்ரசிகர்கள் குழப்பம்அடைந்துள்ளனர். யுவன்சங்கர்ராஜாதற்போது விஜயின்'GOAT'படத்திற்குஇசையமைக்கும்பணிகளில் தீவிரமாகஈடுபட்டுவருகிறார்என்பதுகுறிப்பிடத்தக்கது.

## மலையாள சினிமாவின் அனிருத்: தொடர்ந்து ஹிட் கொடுக்கும் 'மஞ்சும்மல் பாய்ஸ்'



மலையாளத்தில் அண்மையில் வெளியான மஞ்சும்மல் பாய்ஸ் திரைப்படம் வெளியான 12 நாட்களில் 100 கோடி வசூலை கடந்து சாதனை படைத்துள்ளது. இதன் மூலம் மலையாள திரையுலகில் ரூ. 100 கோடி வசூல் செய்த நான்காவது படம் என்ற பெருமையை மஞ்சும்மல் பாய்ஸ் பெற்றுள்ளது.

மலையாள திரையுலகில் தொடர்ச்சியாக ஹிட் பாடல்களை கொடுத்து வந்த இசையமைப்பாளர் சுஷின் ஷியாம் மஞ்சும்மல் பாய்ஸ் படத்தின் மூலமாக தமிழ்நாட்டிலும் கவனம் பெற்றுள்ளார். மஞ்சும்மல் பாய்ஸ் படத்தின் பாடல்கள் தமிழ்நாட்டிலும் வரவேற்பை பெற்றுள்ளது

இவர் இதற்கு முன்பு, குரூப், கும்பலாங்கி நைட்ஸ், மின்னல் முரளி, ரோமாஞ்சம், கண்ணூர் ஸ்குவாட் போன்ற பல வெற்றி படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

இந்நிலையில் சுஷின் ஷியாம் இசையமைக்கும் புதிய படம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளது.

ரோமாஞ்சம் படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான ஜீத்து மாதவன் இயக்கத்தில் ஆவேசம் என்ற புதிய படத்தில்பகத்பாசில்நடித்துவருகிறார்.இப்படத்திற்கு'மஞ்சும்மல்பாய்ஸ்'புகழ்சுஷின்ஷியாம்இசையமைத்துள்ளார். இப்படத்தின் முதல் பாடல் வெளியாகியுள்ளது.

## கார்த்தி டாணாக்காரன் பட இயக்குநர் கூட்டணியில் உருவாகும் கேங்க்ஸ்டர் படம்



கார்த்தியின்25வது படமாக வெளிவந்தஜப்பான்போதிய வரவேற்பைப் பெறவில்லை. இதனையடுத்து அவர் தற்போது '96' பட இயக்குநர் பிரேம் குமார் இயக்கத்தில் மெய்யழகன் என்ற படத்திலும், இயக்குநர் நலன் குமாரசாமி இயக்கத்தில் வா வாத்தியாரே என்ற படத்திலும் ஒரே நேரத்தில் நடித்து வருகிறார். இதனைத் தொடர்ந்து சர்தார் 2, தீரன் அதிகாரம் 2, கைதி 2 ஆகிய பார்ட் 2 படங்களில் கார்த்தி நடிக்க இருப்பதாகதகவல்கள்வெளியாகியிருந்தன. இந்தவரிசையில்கார்த்தியின்புதிய படம் குறித்துதகவல்கள் வெளியாகியுள்ளன. வெற்றிமாறனிடம் உதவி இயக்குநராக பணியாற்றி, டாணாக்காரன் படம் மூலம் இயக்குநராகஅறிமுகமானதமிழ் இயக்கத்தில்கார்த்திநடிக்கஇருக்கிறார்என்றதகவல்வெளியாகியுள்ளது.

விக்ரம் பிரபு, எம்.எஸ் பாஸ்கர், லால் உள்ளிட்ட பலர் நடித்த டாணாக்காரன் படம் நேரடியாக ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியானது. அதிக எதிர்பார்ப்புகள் இல்லாமல் வெளியான டாணாக்காரன் மக்களிடையே மிகப் பெரிய வரவேற்பை பெற்றது. கார்த்தி தமிழ் இணையும் இப்புதிய படம், 1960 களின் காலகட்டத்தில் நடைபெறும் கேங்க்ஸ்டர் பின்னணியில் உருவாகவுள்ளதாக சொல்லப்படுகிறது. ட்ரீம் வாரியார் பிக்சர்ஸ் இந்த படத்தை தயாரிக்கிறது. இயக்குநர் தமிழ் ஜெய்பீம், வடக்குப்பட்டி ராமசாமி உள்ளிட்ட பல படங்களில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


## 12 நாட்களில் ரூ. 100 கோடி.. வசூலில் மாஸ் காட்டும் மஞ்சும்மல் பாய்ஸ்

மலையாளத்தில் உருவான மஞ்சும்மல் பாய்ஸ் என்ற படம் கடந்த சில நாட்களுக்கு முன்பு ரிலீசானது. இயக்குனர் சிதம்பரம் இயக்கிய இந்த படத்தில், ஸ்ரீநாத் பாசி, சௌபின் சாஹிர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். கேரளாவில் ரிலீசான இந்த படம் தமிழ்நாடு மற்றும் உலகம் முழுக்க வெளியிடப்பட்டது.


மஞ்சும்மல் பாய்ஸ் படத்தை பார்த்த பலரும் இந்த படத்திற்கு பாராட்டு தெரிவித்து வருகின்றனர். தமிழ் திரையுலகில் முன்னணி நடிகர்கள், இயக்குநர்கள் என பிரபலங்கள் பலரும் படக்குழுவினரை பாராட்டி வருகின்றனர்.

இதன் காரணமாக 'மஞ்சும்மல் பாய்ஸ்' படம் வசூலில் ரூ. 50 கோடியை கடந்த நிலையில், 12 நாட்களில் இந்த படம் ரூ. 100 கோடி வசூல் செய்துள்ளதாக படக்குழு தற்போது அறிவித்து இருக்கிறது. இதன் மூலம் மலையாள திரையுலகில் ரூ. 100 கோடி வசூல் செய்த நான்காவது படம் என்ற பெருமையை மஞ்சும்மல் பாய்ஸ் பெற்றுள்ளது.

முன்னதாக நடிகர் மோகன்லால் நடித்து வெளியான புலிமுருகன், லூசிஃபர் மற்றும் கடந்த ஆண்டு வெளியான 2018 போன்ற மலையாள மொழி படங்கள் வசூலில் ரூ. 100 கோடியை கடந்து அசத்தின. மஞ்சும்மல் பாய்ஸ் படத்தை தொடர்ந்து இயக்குநர் ஏ.டி. கிரிஷ் இயக்கத்தில் வெளியான பிரேமலு படமும் விரைவில் ரூ. 100 கோடி வசூலை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## கமலின் 'தக் லைஃப்' படத்தில் இருந்து விலகிய முன்னணி நடிகர்: யார் தெரியுமா?




பிரபல இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் உலகநாயகன் கமல்ஹாசன் தக் லைப்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் திரிஷா, துல்கர் சல்மான், ஜெயம் ரவி மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர் என்று படக்குழு அறிவிப்பு வெளியிட்டிருந்தது.

மெட்ராஸ் டாக்கீஸ், ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் மற்றும் ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் இணைந்து இப்படத்தை தயாரிக்கிறது.

'தக் லைஃப்' திரைப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்க ரவி.கே.சந்திரன் ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்தின் அறிமுக வீடியோ எதிர்பார்ப்பை எகிற வைத்தது. இதையடுத்து இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கியது.

இநநிலையில், கால்சீட் பிரச்சினை காரணமாக இப்படத்தில் இருந்து துல்கர் சல்மான் விலகியுள்ளார்.

## முத்தரப்பு டி20 தொடர்: சாம்பியன் பட்டம் வென்றது நெதர்லாந்து




நெதர்லாந்து, நமீபியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் மோதும் முத்தரப்பு டி20 தொடர் நேபாளத்தில் நடைபெற்றது.

இன்று நடந்த இறுதிப்போட்டியில் நெதர்லாந்து, நேபாளம் அணிகள் மோதின. டாஸ் வென்ற நேபாளம் பேட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய நேபாளம் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 184 ரன்கள் எடுத்தது. ஆசிப் ஷேக் 47 ரன்னும், குல்சன் ஜா 34 ரன்னும் எடுத்தனர்.

185ரன்கள்எடுத்தால்வெற்றிஎன்றஇலக்குடன் களமிறங்கிய நெதர்லாந்து 19.3 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 189 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

தொடக்க ஆட்டக்காரர் லெவிட் அரை சதமடித்து 54 ரன்கள் எடுத்தார். சைப்ரண்ட் 48 ரன்னில் அவுட்டானார்.

இதன்மூலம் 4 விக்கெட் வித்தியாசத்தில் வென்ற நெதர்லாந்து சாம்பியன் பட்டத்தை வென்றது. லெவிட் ஆட்டநாயகன் விருது வென்றார்.

## Ball Boyஐ கட்டிப்பிடித்து தூக்கிய கொலின் மன்றோ எதற்கு?



பாகிஸ்தான் சூப்பர் லீக் 2024 டி20 கிரிக்கெட் போட்டி ராவல்பிண்டியில் நேற்று நடந்தது. இந்த ஆட்டத்தில் இஸ்லாமாபாத் யுனைடெட் 29 ரன்கள் வித்தியாசத்தில் பெஷாவர் சல்மியை வீழ்த்தி வெற்றி பெற்றது. இந்த போட்டியின் போது சுவாரசியமான சம்பவம் இடம்பெற்றது.

7வது ஓவரின் கடைசி பந்தில், இஸ்லாமாபாத் வேகப்பந்து வீச்சாளர் பஹீம் அஷ்ரப் வீசிய பந்தை சல்மியின் அமீர்ஜமால் எதிர் கொண்டார். பந்து சிக்சர் நோக்கி பாய்ந்து சென்றது .அப்போது பீல்டர் கொலின் மன்ரோ பாய்ந்து சென்று பந்தை பிடிக்க முயன்றார். ஆனால் அதற்குள் பந்து, எல்லையை தாண்டி சென்றது. அப்போது அந்த பந்தை பால் பாய் ஒருவர் லாவகமாக கேட்ச் செய்தார்.

இந்தகாட்சியைபார்த்ததும்தன்னைஅறியாமல் அந்த சிறுவனை கட்டிப்பிடித்து தூக்கி கொலின் மன்ரோ மகிழ்ச்சி அடைந்தார். இந்த காட்சி தொடர்பான வீடியோ இணையத்தில் தற்போது வைரலாகி வருகிறது.

## கேப்டன் மீது பழி போடுவதா?: தமிழ்நாடு அணி பயிற்சியாளரை சாடிய தினேஷ் கார்த்திக்

தமிழ்நாடு அணி ஏழு வருடத்திற்கு பிறகு ரஞ்சி டிராபி அரையிறுதிக்கு முன்னேறியது. மும்பை அணிக்கெதிராக கடந்த 2ந்தேதி மும்பையில் அரையிறுதி போட்டி தொடங்கியது. டாஸ் வென்ற தமிழ்நாடு அணியின் கேப்டன் சாய் கிஷோர் பேட்டிங் தேர்வு செய்தார்.

முதல் இன்னிங்சில் தமிழ்நாடு அணி 146 ரன்னில் சுருண்டது. பின்னர் முதல் இன்னிங்சில் மும்பை 378 ரன்கள் குவித்துவிட்டது. 106 ரன்னுக்குள் மும்பை 7 விக்கெட்டுகளை இழந்து திணறியது. ஆனால் 9வது வீரராக களம் இறங்கிய ஷர்துல் தாகூர் சதம் (109), 10வது வீரராக களம் இறங்கிய தனுஷ் கோட்டியான் (89 நாட்அவுட்) சிறப்பாக விளையாட மும்பை அணி 378 ரன்கள் குவித்து விட்டது.

பின்னர் 2வது இன்னிங்சை தொடங்கிய தமிழ்நாடு 2வது இன்னிங்சிலும் 162 ரன்னில் சுருண்டு இன்னிங்ஸ் தோல்வியை சந்தித்தது.

3 நாளில் போட்டி முடிவடைந்த நிலையில் தமிழ்நாடு அணியின் கேப்டன் டாஸ் வென்று பேட்டிங் தேர்வு செய்ததுதான் தோல்விக்கு முக்கிய காரணம். நான் எப்போதும் நேரடியாகவே பேசுவேன். முதல் நாள் 9 மணிக்கே (டாஸ் சுண்டப்பட்ட நேரம்) நாங்கள் தோல்வியடைந்து விட்டோம் என பயிற்சியாளர் குல்கர்னி தெரிவித்திருந்தார்.

அணி தோல்வியடையும்போது கேப்டன் மற்றும் அணி வீரர்களும் பயிற்சியாளர் நிற்க வேண்டும். ஆனால், கேப்டனை குறை கூறுவது சரியல்ல என பயிற்சியாளர் குல்கர்னிக்கு எதிராக விமர்சனம் எழுந்த வண்ணம் உள்ளது.

இந்த நிலையில் இந்திய அணியின் முன்னாள் வீரரும், தமிழ்நாடு அணியின் முன்னாள் கேப்டனுமான தினேஷ் கார்த்திக் குல்கர்னி பேச்சுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் "இது மிகவும் தவறானது. பயிற்சியாளரிடம் இருந்து மிகவும் ஏமாற்றம் அளிக்கக்கூடியதாக உள்ளது. ஏழு வருடங்களுக்குப் பிறகு அணியை அரையிறுதி வரை கொண்டு சென்ற கேப்டனுக்கு ஆதரவாக இருந்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக விமர்சனம் செய்துள்ளார். ஆனால் பயிற்சியாளர் முற்றிலுமாக கேப்டன் மற்றும் அணியை பஸ்க்கு கீழ் தள்ளி விட்டுள்ளார்" என்றார்.




## பெண்கள் பிரீமியர் லீக்: மந்தனாவின் அதிரடியால் ஆர்சிபி அணிக்கு 3வது வெற்றி

5 அணிகள் இடையிலான 2வது பெண்கள் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் நேற்றிரவு பெங்களூரு சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்த 11வது லீக் ஆட்டத்தில் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் உ.பி. வாரியர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இதில் முதலில் பேட் செய்த பெங்களூரு அணி 3 விக்கெட்டுக்கு 198 ரன்கள் குவித்தது. உள்ளூர் ரசிகர்களுக்கு விருந்து படைத்த கேப்டன் ஸ்மிர்தி மந்தனா 80 ரன்கள் (50 பந்து, 10 பவுண்டரி, 3 சிக்சர்) விளாசினார். எலிஸ் பெர்ரியும் அரைசதம் (58 ரன், 4 பவுண்டரி, 4 சிக்சர்) அடித்தார்.

அடுத்துகடினஇலக்கைநோக்கிஆடியஉ.பி.வாரியர்ஸ் அணியில் கேப்டன் அலிசா ஹீலி களத்தில் நின்றது வரை அவர்களுக்கு நம்பிக்கை காணப்பட்டது. ஹீலி 55 ரன்னில்(38பந்து, 7பவுண்டரி, 3சிக்சர்) வெளியேறியதும் ஆட்டம் பெங்களூரு பக்கம் திரும்பியது. எதிர்பார்க்கப்பட்ட சமாரி அட்டப்பட்டு (8 ரன்), கிரேஸ் ஹாரிஸ் (5 ரன்) ஏமாற்றம் அளித்தனர்.

20 ஓவர்களில் உ.பி. வாரியர்ஸ் அணி 8 விக்கெட்டுக்கு175ரன்னில்கட்டுப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பெங்களூரு அணி 23 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றியை வசப்படுத்தியது. 5வது லீக்கில் ஆடிய பெங்களூருவுக்கு இது 3வது வெற்றியாகும். உ.பி. வாரியர்ஸ் அணியின் 3வது தோல்வி இதுவாகும்.

இத்துடன் பெங்களூரு சுற்று நிறைவடைந்தது. அடுத்தகட்ட போட்டிகள் டெல்லியில் நடக்கிறது. டெல்லியில் இன்று இரவு 7.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் மும்பை இந்தியன்ஸ் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகள் மோதுகின்றன.

ஏற்கனவே தொடக்க லீக்கில் மும்பையிடம் அடைந்த தோல்விக்கு டெல்லி பழிதீர்க்குமா? என்று ரசிகர்கள் ஆவல் கொண்டுள்ளனர்.



**துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு**

**விளக்கம்:**
யாரிடத்திலும் இன்புறத்தக்க இன்சொல் வழங்குவோர்க்குத் துன்பத்தை மிகுதிபடுத்தும் வறுமை என்பது இல்லையாகும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
86670 25357
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.